**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR**

**DEPOSITION OF WITNESS**

**P.W.2**

**MCOP No.30/2023**

| | |
|---|---|
| **Name** | : டாக்டர்.பிரசாந்த் |
| **Father's Name** | : |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : உதவி மருத்துவர், விழுப்புரம் அரசு மருத்துவமனை |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 27.11.2025.**

**ம.சா.2 முதல் விசாரணை:-**

நான் தற்போது விழுப்புரம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 30.08.2022 ம் தேதி 02.35 PM மணிக்கு பணியில் இருந்த போது சின்னதுரை த.பெ. கலியன், வயது 51, தலைவாசல், என்பவரை 108 ஆம்புலன்ஸ் அவசர சிகிச்சையில் சேர்த்தவரை நான் அவருக்கு 30.08.2022ம் 1.30 மதியம் தலைவாசல் அருகில் சாலை விபத்தில் காயம் அடைந்ததாகவும் பரிசோதித்த போது அவரை பரிசோதித்த நான் கீழ்கண்ட காயங்கள் இருந்தன. 1. வலது முட்டியில் சிராய்ப்பு காயம் 3*1 செமீ அளவிலான காயமும் 2. வலது கணுக்காலில் சிராய்ப்பு காயம் 3*1 செமீ அளவிலான காயமும், 3. இடது கணுக்காலில் சிராய்ப்பு காயம் 2*1 செமீ அளவிலான காயமும், 4. இடது முட்டியில் சிராய்ப்பு காயம் 4*1 செமீ அளவிலான காயமும், 5. வலது காதுபகுதியில் கிழிந்த காயம் 2*1*1 அளவிலான காயமும், 6. வலது முன்மண்டை பகுதியில் சிராய்ப்பு காயம் 2*1 செமீ அளவிலான காயமும் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து பின்னிட்டு மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவ கல்லூரி

மருத்துவமனைக்கு 31.08.2022 காலை 11 மணிக்கு பரிந்துரை செய்தேன். மேலும் அவர் மருத்துவ கல்லூரியில் செய்த மருத்துவ சீட்டு மற்றம் டிஸ்சார்ஜ் சம்மரி மற்றும் அவருக்கு வைத்தியம் பார்த்த மருத்துவரின் காய சான்று பார்த்து அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று நான் சான்றளித்தேன்.

**4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

விபத்து பதிவேட்டில் அடிபட்ட நபர் Under the influence of Alchol என்று குறிப்பிடப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மது போதையால் தான் அவர் சுய நினைவுடன் இல்லாமல் இருந்தார் என்றால் அவ்வாறு சொல்ல முடியாது. அவருக்கு தலையில் அடிபட்டிருந்தது. அவர் சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்பதற்கு காரணம் மதுபோதைதான் என்றால் இருக்கலாம். மேற்படி காயங்களில் கொடுங்காயம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் காது மற்றும் தலையில் ஏற்பட்ட காயங்கள் (5,6) கொடுங்காயங்கள் என்று குறிப்பிட்டுள்ளேன். காய சான்றை நான் இந்த நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் அது சேலம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உள்ளது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.27 17:59:24 +0530

**Accidents Claim Tribunal, Attur.**